DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 96/2026
Miscellaneous :
Sessions : PW 6
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | மோகன் |
| Father / Husband Name | ஸ்ரீராமன் |
| Village | பொலம் பாக்கம் |
| Taluk | செய்யூர். |
| Age | 61 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **04.06.2026**

**முதல் விசாரணை:**

1.) நான் தற்போது 30.09.2024 ம் தேதி அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று பொலம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 04.04.2025 ம் தேதி அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இ ருந்த போது அன்றைய தினம் மாலை சுமார் 4.30 மணிக்கு கங்கம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று புகார்மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 68/2025 BNS பிரிவுகள் 281 106(1) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2.) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாலாஜி மற்றும் வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த மாதிரி வரைபடம் அசாஆ 5 ஆகவும் மற்றும் பார்வை மகசர் அசாஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்கில் இறந்துபோன ராகவன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன்.**(அந்த பிரேத விசாரணை அறிக்கை அசா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்பிணை காவல் ஆய்வாளர் சரவணன் என்வரிடம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வளார் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

3. வழக்கின் புகாரை எந்த தேதியில் யாரிடமிருந்து பெற்றேன் என்றால் 04.04.2025 ஆம் தேதி மாலை 4.30 மணியளவில் இறந்தவரின் மகள் கங்கம்மாள் என்பவரிடம் இருந்து வாங்கினேன். புகாரை பெற்று எப்போது சம்பவயிடம் சென்றேன் என்றால் சுமார் 30 நிமிடத்தில் சென்றேன். சம்பவயிடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு மீண்டும் எப்போது வந்தேன் என்றால் சாட்சிகளை விசாரணை செய்துவிட்டு 1 மணிநேரம் கழித்து வந்தேன். சம்பவயிடத்தில் இருந்து காவல் நிலையம்

எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 6 கிமீ தூரம் இருக்கும். பொதுவாக விபத்தில் ஒருவர் இறந்து மருத்துவமனைக்கு அவரின் பிரேதம் சென்றால் மேற்படி மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு எப்போது தகவல் வரும் என்றால் இந்த வழக்கில் புகார்தாரர் தான் மேற்படி விபத்து குறித்து புகார் கொடுத்தார். மருத்துவமனையில் இருந்து எந்த தகவலும் வரவில்லை. பொதுவாக BNS 106(1) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் யார் விசாரிக்க வேண்டும் என்றால் உயர் அதிகாரி அயல் பணிக்காக வெளியில் சென்றதால் நான் புகாரை பதிவு செய்து விசாரித்தேன். வழக்கில் இறந்தவரின் உறவினர்களை தவிர்த்து பொது சாட்சிகள் எவரேனும் சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்களா என்றால் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். நான் பட்டியல் சாட்சி 1 முதல் 7 வரையாளவர்களை விசாரணை செய்தது குறித்து காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தாரா என்றால் விசாரணை செய்தார். நான் சம்பவயிடம் சென்று சாட்சிகளை சரிவர விசாரிக்கவில்லை என்றாலும் இறந்தவருக்கு இழப்பீடு பெற்று தர வேண்டி பொய் புகாரை பெற்று பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.II
Madurantakam